அவர்களோடு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுவின் (பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி) தலைவர் அவர்களும்' அவர்களுடைய அலுவல் காரணமாக (எக்ஸ்-அஃபிஷியோ) இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

மேலும், சட்டப் பேரவையின் 165-வது விதிக்கிணங்க திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(இ) பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கான தேர்தல்

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : 1967-68-வது ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு (பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி) இச் சட்டப் பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர்களாவன :—

(1) திரு. எம். பூபதி
(2) திரு. பி. ஜி. கருத்திருமன்
(3) திரு. ஆர். பொன்னப்ப நாடார்
(4) திரு. பி. எம். முலுசாமி கௌண்டர்
(5) திரு. பி. எஸ். மணியன்
(6) திரு. மா. பா. சாரதி
(7) திரு. ஈ. ஆர். கிருஷ்ணன்
(8) திரு. எம். சி. பாலன்
(9) திரு. பெ. மலைச்சாமி
(10) திரு. சி. கிருஷ்ணமூர்த்தி
(11) திரு. பெ. சௌந்தரபாண்டியன்
(12) டாக்டர் ஹபிபுல்லா பெய்க்
(13) திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்
(14) திரு. பி. கே. மூக்கையா தேவர்

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1967-68-வது ஆண்டு பொதுக் கணக்கு ஆய்வுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படித் தேர்தெடுக்கப்பட்டுவிட்டதாக நான் அறிவிக்கிறேன். அவர்களோடு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் (எஸ்டிமேட்ஸ் கமிட்டி தலைவர்) திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களும், அவர்களுடைய அலுவல் காரணமாக (எக்ஸ் அஃபிஷியோ) இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

மேலும், இச் சட்டப் பேரவையின் 174-வது விதிக்கிணங்க திரு. பி. ஜி. கருத்திருமன் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.